
# ஊருக்கு ஒருவர்



இரா. இளங்குமரனார்

# ஊருக்கு ஒருவர்

இரா. இளங்குமரனார்

**வெளியீடும் நூல் கிடைக்கும் இடங்களும்**

திருமதி பாலாம்பாள் - குமரசாமி நினைவு
அறக்கட்டளை வெளியீடு
நெய்வேலி.

**திருவள்ளுவர் தவச்சாலை**
திருவளர்குடி (அல்லூர்)
திருச்சிமாவட்டம் - 620 101
தொலைப் பேசி : 0431-2685328

# நூற்குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | ஊருக்கு ஒருவர் |
| ஆசிரியர் | இரா. இளங்குமரன் |
| மொழி | தமிழ் |
| பொருள் | ஊர் நலம் |
| பதிப்பு | மூன்றாம் பதிப்பு, 2012 ஏப்பிரல் |
| பக்கம் | 48 |
| எழுத்து | 12 புள்ளி |
| தாள் | 13.6 மேப்லித்தோ |
| அளவு | 1/16 கிரௌன் |
| படிகள் | 1000 |
| விலை | உருபா.25 |
| உரிமை | ஆசிரியர்க்கு |
| வெளியீடு | திருமதி பாலாம்மாள் – குமரசாமி நினைவு அறக்கட்டளை வெளியீடு நெய்வேலி. |
| நூலாக்கம் | "தி பிரிண்டிங்கு அவுசு" திருச்சி - 23 |

நூல் கிடைக்குமிடம்:

- திருமதி பாலாம்மாள் – குமரசாமி நினைவு அறக்கட்டளை
  நெய்வேலி.
- திருவள்ளுவர் தவச்சாலை
  அல்லூர் 620 101, திருச்சி மாவட்டம்,
  தொலைப்பேசி எண் : 0431 - 2685328

## ஊருக்கு இருவர்

'ஊருக்கு ஒருவர்' என்னும் சுவடி, அளவால் குறுஞ்சுவடி; பொருளால் பெருஞ்சுவடி!

ஊருக்கு ஒருவர், முழுதுறும் ஒப்புரவாளராகக் கிளர்ந்தால் ஊரே, நாடாய், உலகாய் விரிவுறும் என்னும் நோக்கின் படைப்பு.

பாட்டியும் பேரனும் இயல்பாக உரையாடும் அமைவில் எழுந்த படைப்பு நூல்.

இப்படைப்பு, நம் பழநாள் இயற்கை இயங்கியல் குடும்பவாழ்வு வழியது. இன்றும், இதன் எச்சம் முயன்று காண்பார்க்குச் சிற்றூர்ப்பகுதிகளில் காணக் கூடியதே

நடைப்படுத்த முடியாத எதுவும் இச்சுவடியில் இடம்பெறவில்லை. பெரிதும் நான் பிறந்த மண்ணும் அம்மண்ணின் மக்கள் வாழ்வும் என் இருபது அகவைக்குள்ளான ஊர்நிலையும் உறவுநிலையும் பண்பாடும் குமுகாய ஒப்பந்த நிலைகளும் இப்படைப்பின் மூலமும் முதலும் எனல் தகும் (1930 - 1950).

இச்சுவடி மூன்றாம் பதிப்பாம். இப்பதிப்பை அவாவிய பெருமகனார் கு. தாமோதரனார், அவர்தம் குடும்பத்தார்.

தாமோதரனார், தம் பெற்றோர் பெயரால் நிறுவிய அறக்கட்டளை வழியே பலப்பல நலத்திட்டங்கள் நிகழ்கின்றன. அவற்றுள் ஒன்று முன்னரே, 'என் வாழ்க்கைக் குறிப்புச் சுவடியைப் பல்லாயிரம் அச்சிட்டு அவ்வருவாயையும் தவச் சாலைக்கே வழங்கியது.

பின்னர்த் திருக்குறள் கருத்துரை வெளியிட்டது. இது கால், "**திருமதி பாலாம்மாள் - குமரசாமி நினைவு அறக்கட்டளை**" வழியே '**ஊருக்கு ஒருவர்**' என்னும் இச்சுவடியை வெளியிடுவது. இதற்கு நெஞ்சார்ந்த என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நெய்வேலித்** தோன்றலாகிய **தாமோதரர், 'வாலறிவன் முப்பால் கழக'** நிறுவனர் **திருமிகு. மேத்தா வாணன்** அவர்களின் அரும்பெருந் தொண்டில் இணைந்தவர். ஆதலால், மேத்தா வாணரும் இவ்வெளியீட்டு அறக் கட்டளையுடன், இணைந்த அறக்கட்டளையராய்த் திகழ்கின்றார்! 'தொண்டலால் துணையும் இல்லை' என்னும் தொண்டர் பெருமான் அப்பரடிகள் வாக்கை மெய்ப்பிக்கும் இணைத் தொண்டர், செயலும் எடுத்துக் காட்டாகப் பற்றிக் கொள்ளத் தக்கது என நலம் பாராட்டுதல், '**ஊருக்கு இருவரா**'ய்ச் சிறக்கின்றதாம்! இருவர்,மூவர், நால்வர் எனப் பெருகச் செய்யும் தொண்டு, இந்நூற்பயன் பெருக்கும் என்பது உறுதியாம்.

என் நூல்களை மெய்ப்புப் பார்த்து உதவுவதில் பேரார்வமும் அக்கறையும் காட்டும் முனைவர் திருமிகு. **பி. தமிழகனார்க்கும்,** அருமையாக அச்சிட்ட அச்சகத்தார்க்கும் நன்றியுடையேன்.

இன்ப அன்புடன்

**இரா. இளங்குமரன்**

*தி.பி.2043. மாசி 26*

*கி.பி. 09.03.2012*

# ஊருக்கு ஒருவர்

பாட்டி! பாட்டி! உங்களைப் பார்க்க ஒருவர் வந்திருக்கிறார்!

என்னைப் பார்க்கவா?

ஆம்! உங்களைப் பார்க்கத்தான்!

சரி! திண்ணையில் உட்காரச் சொல்; என் கைக் கம்பை எடுத்துக்கொடு (கம்பை ஊன்றிக் கொண்டு பாட்டி செல்கிறார்)

- **பாட்டி வணக்கம்.**

அப்பா நல்லா இரு! என்னைப் பார்க்க வந்தாயாம்!

- **ஆமாம் பாட்டி; உங்களைத்தான் பார்க்க வந்தேன்!**

உங்கள் பெயர் அருமையான பெயர் பாட்டி!

அப்படியா! என் பெயர் அருமையான பெயர் என்றால், அது நானே வைத்துக்கொண்ட பெயரில்லையே! எங்கள் அப்பா அம்மா வைத்த பெயர்; அவர்களைத் தான் அப்பெருமை சேரும். ஆனால் அவர்களுக்கு முன்னாலேயே இப்பெயர் எங்கள் ஊரார்க்குக் கிடைத்து விட்டது.

◆ ***எப்படி பாட்டி?***

*எங்கள் ஊர்த் தெய்வப் பெயர் வாழவந்தாள்: எங்கள் ஊர்ப்பெயர் வாழவந்தாள்புரம்; எங்கள் பாட்டி பெயரும் வாழவந்தாள். இப்பெயர் இல்லாத வீடே இவ்வூரில் இல்லை.*

◆ ***புதுமையாக இருக்கிறதே பாட்டி!***

*இதில் என்ன புதுமை? நாம் எல்லாரும் ஏன் பிறந்தோம்? வாழத்தானே பிறந்தோம்! வாழத்தானே வந்தோம்! யாராவது வாழவேண்டாம் என்று எண்ணுவாரா? அப்படி எண்ணினால் அவரைப் பற்றி என்ன நினைப்போம்?*

◆ ***நல்லது பாட்டி! ஊர்ப்பெயர் மட்டுமில்லை; ஊர்ப் பண்பாடும் உழைப்பும் வாழ்வும் எல்லாமும் பக்கத்தூரெல்லாம் பாராட்டும் வகையில் உள்ளதே! அதற்கு, நீங்கள் தான் காரணம் என்கிறார்களே! அதை உங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளத்தான் வந்தேன்.***

*நீ படித்த பிள்ளை; படியாத நான் உனக்கு என்ன சொல்ல முடியும்! "கிழவி சொல்லைக் கின்னரிக்காரன் கேட்பானா?" என்பது பழமொழி. படித்த பிள்ளைகள், படியாதவர்களுக்கு நல்லது பொல்லது சொல்ல வேண்டும்; நாட்டில் அப்படிப் பார்க்க முடியவில்லை. 'நம் பிழைப்பை நாம் தான் பார்த்துக்கொள்ள வேண்டும்' என்று முடிவு செய்தோம். அந்த முடிவுக்கு எதிராக யாரும் இல்லை என்று தெளிவு செய்தோம். அதன்படி செயல்பட்டோம். ஊரே பசி பஞ்சம் திருட்டு புரட்டு*

இல்லாமல் 'நல்ல ஊர்' என்று பக்கத்தூர் பாராட்ட இருக்கிறது.

◆ **எனக்கு விளக்கமாகச் சொல்லுங்கள் பாட்டி**

சொல்கிறேன்; எங்கள் ஊர் சிறிய ஊர்; அறுபது வீடுகள் மட்டுமே உள்ள ஊர்; ஒவ்வொரு வீட்டிலும் இருக்கும் ஆண், பெண், பிள்ளை, ஆடு, மாடு, கோழி குஞ்சு, நிலபுலம் எல்லாமும் எல்லாருக்கும் தெரியும். அது பெரிய வாய்ப்பாக இருந்தது.

இரண்டு பேர்களுக்கு மட்டும் கொஞ்சம் வசதி; ஒருவர்க்கு நிலபுலம் மிகுதி; ஒருவர்க்குக் கையிருப்பு இருந்தது. கவலை இல்லாமல் சாப்பிட அந்த இரண்டு குடும்பங்களுக்கும் முடியும். சிறு சிறு நிலம்; தோட்டம் என்று இருப்பவர்கள் சிலர்; பலர் கூலி வேலை செய்து பிழைப்பவர்கள். நாளைக்கு ஒரு வேளை இருவேளைச் சாப்பாட்டுக்கே கடினப்பட்டவர்களும் உண்டு.

◆ **ஆனால், வீடுகளைப் பார்த்தாலோ, ஆள்களைப் பார்த்தாலோ வறுமை என்பது தெரியவில்லையே பாட்டி!**

இப்பொழுதுள்ள ஊர் நிலையை நீ சொல்கிறாய்! ஆனால் அப்பொழுது இந்த ஊர் படாத வறுமை நோய் சண்டை தகராறு அடி தடி எந்த ஊரிலும் இராது. அப்படி இருந்த ஊர்தான்! அப்படி இருந்தது கூட நல்லதுதான்! அதனால்தான் அதில் இருந்து விடுபடும் உறுதி ஊர்க்கு ஒட்டுமொத்தமாக உண்டாக்க முடிந்தது. உண்டாகியும் உள்ளது.

◆ ***அதை சொல்லுங்கள் பாட்டி!***

ஒருவர்க்கு நிலபுலம் மிகுதி என்று சொன்னேனே, அந்த வீடு எங்கள் வீடுதான்! எங்கள் மக்கள் ஐந்து பேர்கள். எங்களுக்கு ஒரு பங்கும் மக்களுக்கு ஐந்து பங்கும் பிரித்துக் கொடுத்து விட்டோம். ஒவ்வொரு குடும்பத்திற்கும் பிரித்த நிலம்; துண்டுபட்டுப் போனது. ஒவ்வோர் இடத்திலும் ஆறு பிரிவு. கிணற்றில் ஆறு பங்கு; வீட்டில் ஆறு பங்கு; தொழுவில் ஆறு பங்கு; ஆடு மேய்க்க ஆறு ஆள்; செலவு மிகுதியாயிற்று; குடும்பமும் பெருகியது; செலவும் பெருகியது; வரவு சுருங்கியது. குடும்ப உறவும் மாறியது; வாய்ச்சண்டை, கைச்சண்டை, வரப்புச் சண்டை எனப் பெருகியது. குடும்ப உறவே அற்று என்ன நேரம் என்ன ஆகுமோ? எனச் சஞ்சலம் ஆகிவிட்டது. நானும் என் வீட்டுக்காரரும் எப்படி எப்படியோ நினைத்தோம்; பல நாள் பேசினோம்; நம் குடும்பத்துடன் ஊரே நன்றாக இருக்க நாம் உயிருள்ள போதே ஏதாவது செய்துவிட வேண்டும் என உறுதி எடுத்தோம்.

வந்த பிள்ளைக்குத் தண்ணீர் கூடக் கொடுக்காமல் நான் பாட்டுக்குப் பேசிக் கொண்டிருக்கிறேன் பார்! கண்ணம்மா செம்பில் மண்பானைத் தண்ணீர் கொண்டுவா!

◆ ***தண்ணீர் நினைவே வரவில்லை! நீங்கள் சொல்லும் செய்தியே தேனாக இனிக்கிறது பாட்டி! (தண்ணீர் வரவும் குடிக்கிறான்)***

கேட்பதற்குத் தேனாக இருந்து என்ன செய்ய? நாங்கள் செய்த வகையை நான்கு பேர்களாவது நல்லது என்று ஒப்புக் கொண்டு செய்வதற்கு நீ முயற்சி செய்வாயா?

◆ **பாட்டி, உங்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு செய்வதற்காகத் தான் தேடி வந்தேன் பாட்டி!**

நல்லது, என் வீட்டுக்காரர் என்னைப் புரிந்து கொண்டவர்; அதுபோலவே நானும் அவரைப் புரிந்து கொண்டவள்; என் சொல்லை அவர் தட்டிப் பேசமாட்டார். ஏதாவது சொன்னால், 'நானும் அப்படித்தான் நினைத்தேன்; நீயும் அதையே சொல்கிறாய்' என்பார். அவர்தான் எனக்கு ஊக்கமும் துணையுமாக இருந்து உதவுகிறார்.

◆ **அவரைக் காணவில்லை பாட்டி!**

அவர்க்கு இப்பொழுதெல்லாம் இந்த ஊர் வேலை இல்லை. இவ்வூர் வேலையை என் தலையில் கட்டிவிட்டு, மற்ற ஊர்களை அவர் தலைமேல் போட்டுக்கொண்டு பாடுபடுகிறார். நம்மூர் மட்டும் நன்றாக இருந்தால் போதுமா தம்பி! பக்கத்தூரில் தொற்று நோய் இருந்தால் இங்கே வர எவ்வளவு நேரமாகும்?

◆ **ஆமாம் பாட்டி! மிகச் சரி.**

"ஒரு நாள் நானும் அவரும் வீடு வீடாக முப்பது வீட்டுக்கும் போனோம். ஆண் பெண் பிள்ளை எல்லாரும் தவறாமல் ஊர் மடத்துக்கு வர வேண்டும்; எல்லாரிடமும் சொல்லிவிட்டு ஊரைவிட்டே போகப் போகின்றோம்" என்றோம்.

"என்ன, என்ன! இப்படிச் சொல்கிறீர்கள். உங்கள் வீடே பெரிய வீடு; உங்கள் மக்களையும் எங்களையும்

விட்டு விட்டா போகிறீர்கள்; போகக்கூடாது" என ஒவ்வொருவரும் கூறினர். கட்டாயமாகக் கூட்டத்துக்கு வந்துவிடுங்கள் என்று சொல்லி வந்தோம்.

நல்ல நிலா வெளிச்சம்; ஊரில் இருந்த எல்லாரும் கூடி விட்டனர். அவரும் நானும் திட்டமிட்டபடி நானே பேசினேன்.

"என் மக்கள் ஐந்து பேர்! அவர்கள் மட்டுமா என் மக்கள், அப்படி நினைத்தோம் என்று உங்களில் யாராது சொல்ல முடியுமா? இந்த ஊரார் எல்லாரும் எங்கள் மக்கள் என்று தானே நானும் அவரும் வாழ்கிறோம். இல்லை என்றால் யாராவது சொல்லுங்கள்" என்றேன்.

"இந்த ஊர் முழுவதற்கும் தாயும் தந்தையும் நீங்கள்தாம் என்று தானே நாம் வாழ்ந்து வருகிறோம். யாராவது மாறாகச் சொன்னார்களா? அப்படிச் சொன்னது யார்?" என்று பலர் கேட்டனர். "யாரும் அப்படிச் சொல்லவில்லை. ஆனால், எங்கள் மக்களே எங்கள் மக்களாக இல்லை. ஊர் மக்களும் எங்கள் மக்கள் போல இல்லை. இச்சிறிய ஊரிலேயே நீ, நான், நீ இன்ன சாதி, அவன் இன்ன சாதி, அவன் சாமி அது, இவன் சாமி இது என்றெல்லாம் பேச்சு வந்துவிட்டது. வன்பு துன்பு வழக்கு அறியாமல் வாழ்ந்து வந்த ஊர், எல்லாத் தீமைகளுக்கும் இடமாகிக் கொண்டு வருகிறது. குடி என்பதே அறியாத இந்த ஊரில் ஒருவன் குடித்து விட்டுப் பேசிய பேச்சும் கிடந்த கிடையும் ஊர் வேடிக்கையாகி விட்டது.

உழைப்பவர் வீட்டிலே உலையில் போட்டு ஆக்க வழியில்லாமல் இருப்பது கண்டு எங்கள் மனம் கூனிக் குறுகிப் போகின்றது. கந்தைத் துணியும் பரட்டைத்

தலையும் கூரைபோன குடிசையும் பார்க்கப் பார்க்க எரிகின்றது. எங்களுக்குத் தாங்கிக் கொள்ள முடியவில்லை! ஊரைவிட்டே ஒழிந்து போகிறோம்! உங்கள் எல்லாரிடமும் சொல்லி விட்டுப் போகவே அழைத்தோம்! ஊரும் உலகும் போகிற போக்கைப் பார்த்து அதனைத்தாங்கிக் கொள்ள முடியாத ஒரு கணவனும் மனைவியும் அதனை எழுதி வைத்துவிட்டுக் கடலில் முழுகிப் போயினர். அதுபோல் நாங்கள் செய்ய மாட்டோம். எங்களால் முடிந்ததைச் செய்து பார்ப்போம். முடியாதுபோனால் ஊரை விட்டுப் போய்விடுவோம். எந்த ஊருக்குப் போனாலும் இதுதானே என்பதை நினைத்தே அறிந்த ஊரில் இருந்தே முடிந்ததைச் செய்துவிடுவது எனக் கேட்கிறோம்" என்றேன்.

பாட்டி! பாட்டி! நீங்கள் ஊரை விட்டுப் போகவே கூடாது; நீங்கள் போனால், நாங்களும் கூடவே வந்து விடுவோம். நான் கட்டியிருக்கும் துணி நீங்கள் கொடுத்தது. நான் போட்டிருக்கும் கால்சட்டை நீங்கள் தந்தது. பசித்த வேளை எல்லாம் பசியாற்றியவர்கள் நீங்கள். ஊரை நீங்கி நீங்கள் போனால் நாங்களும் வந்து விடுவோம் என்று பிள்ளைகள் கூச்சலிட்டு அழுதனர். பெரியவர்கள் வாய்க்கு வாய் நீங்கள் போகக் கூடாது; நாங்கள் என்ன குற்றம் செய்தாலும் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்றனர். எங்கள் சொந்தப் பிள்ளைகளோ இடிந்து போய்ப் பேச்சும் வராமல் வாய் பொத்தி நின்றனர். பேரப் பிள்ளைகள் எங்கள் கால்களைக் கட்டிக் கொண்டு அழுதனர்.

'நாம் சொல்ல வேண்டியதைச் சொல்வோம்; அதனைக் கேட்பதாக இருந்தால், நாமும் அவர்கள்

பேச்சைக் கேட்டு இருப்போம் இல்லையானால் நம் திட்டப்படி ஊரைவிட்டுப் போய்விடுவோம்' என்றார் அவர்.

"சொல்லுங்கள்! சொல்லுங்கள்! சொன்னபடி கேட்கிறோம். நீங்கள் மட்டும் ஊரை விட்டுப் போகக்கூடாது" என்று ஒருமித்து ஊரார் கூறினர்.

நான் சொல்ல வேண்டும் என்று அவர் கூறினார். நான் சொன்னேன்.

உங்களில் யாராவது உழையாமல் இருக்கிறீர்களா? வெட்டிச் செலவு செய்கிறீர்களா?, அப்படி இல்லாமலும் குடிக்கக் கஞ்சியில்லாமலும் கட்டத் துணியில்லாமலும் பட்டினியும் பசியுமாய், கந்தையும் கிழிசலுமாய் வாழ்வது ஏன்? இந்த நிலையில் எத்தனை சண்டை - எத்தனை தகராறு -அடி தடி! இவற்றை நினைத்துப் பார்த்தீர்களா?

குடித்துவிட்டு வந்த ஒருவனை விரட்டி விரட்டி அடித்தீர்கள்; ஆனால் குடியாமல் வாய்க்கு வந்தபடி பேசிச் சண்டை போடுபவர்களைக் கண்டு கொண்டீர்களா? கண்டித்தீர்களா? அவனுக்கு நாலுபேர், இவனுக்கு நாலுபேர் என்று பிரிந்து நின்று, சண்டைபோட்டுப் பகையாளி ஆனீர்களா இல்லையா?

அவரைச் கொடி, முல்லைக் கொடி, சுரைக்கொடி, துணிகாயப் போடும் கொடி என்றே இருந்த ஊரில் எத்தனை கட்சிக் கொடிகளைக் கட்டிக் கொடுமையாகக் கட்சி கட்டிக் கொண்டிருக்கிறீர்கள்! நீங்கள் செய்வதெல்லாம் சரிதானா? ஒரு தாய் பெற்ற

பிள்ளைபோல வாழ்ந்த நீங்கள், அதை எல்லாம் ஏன் மறந்தீர்கள்? வாயை மூடிக்கொண்டு இருந்தால் என்ன பயன்? நான் சொல்வது இல்லாததா? பொல்லாததா? சொல்லுங்கள் என்றேன்.

ஆணும் பெண்ணும் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு தவறு செய்ததுபோல உணர்ந்து வாயை மூடிக் கொண்டிருந்தார்கள்.

எங்களைப் போலவே ஊர் நிலையை நினைப்பவர்களும் இருக்கிறார்கள் என்பதை நாங்கள் அறிவோம். அவர்கள் எங்களைப் பார்த்தார்கள். கண் கலங்கினார்கள். "அம்மா நீங்கள் சொல்வதெல்லாம் உண்மை தான். நீங்கள் சொல்லும் வழியிலே ஊர் நடக்கும் அம்மா சொல்லுங்கள்" என்றனர்.

"ஊரார்கள் நாங்கள் சொல்வதைக் கேட்பார்களாம் ! நீங்கள் கேட்பீர்களா?" என்று என் மக்களைக் கேட்டேன். ஒருவரை ஒருவர் புதிதாகப் பார்ப்பது போல் பார்த்துக் கொண்டு நாங்கள் கேட்போம் என்றனர்.

இன்று முதல் எவருக்கும் சோற்றுப் பஞ்சம் இராது. துணிப்பஞ்சமும் இராது. ஒருவருக்குச் சோறில்லா நிலை என்றால், ஊருக்கே சோறில்லா நிலைதான்!

எல்லார்க்கும் ஒரே இடத்தில் சாப்பாடு. ஊரில் ஏதாவது நிகழ்ச்சி என்றால் ஊர்ச்சாப்பாடு போடுவது நம் வழக்கம்தானே! நாலு வீட்டுக்காரர் சேர்ந்து தானே சமைப்போம்! நாலு பிள்ளைகள் முன்வந்து பரிமாறத்தானே செய்வர்! அப்படி, ஒவ்வொரு

வேளையும் வீட்டுச் சமையல் இல்லை! ஊர்ச் சமையல்! ஊர்ப்பந்தி! இதற்கு ஒப்புக் கொள்கிறீர்களா? என்றேன்.

தாயே, தெய்வமே பேசுவது போலப் பேசுகிறீர்கள்! எங்கள் வெந்து போன உடலுக்கும் நொந்து போன உள்ளத்திற்கும் பால் வார்க்கிறீர்கள்! இதை வேண்டாம் என்று சொல்வோமா? என்றனர்.

ஊர்ச்சோற்றுக்கு வழி வேண்டுமே! அரசைக் கேட்பதா? அயலூரைத் தேடுவதா? இரண்டும் இல்லை! ஊரெல்லாம் சேர்ந்து சாப்பிட ஊர் தான் வழி செய்ய வேண்டும்.

ஊர்க்குத் குடிதண்ணீர்க்குளம் இருக்கிறதே மழை பெய்தால் தடை இல்லாமல் தண்ணீர் வர நாம் தானே பார்க்கிறோம். அழுக்கு பாசி பிடியாமல் நாம் தானே பார்க்கிறோம். உடைப்பு எடுத்துப் போகாமல் அருவறுப்பு ஆக்காமல் நாம் தானே பார்க்கிறோம். அப்படித்தான் நம் சாப்பாட்டுக்கும் நாம் வழிவகை செய்ய வேண்டும்.

எங்களுக்குத் தான் ஊரில் மிகுதியான நிலம் என்பது உங்களுக்குத் தெரியும். அதனை ஆறு பங்கு போட்டதால் சுருங்கிப் போய், 'வயலில் பாதி வரப்பு' என ஆனதும் உங்களுக்குத் தெரியும். இன்று முதல் எங்கள் நிலம் எல்லாம் ஊர்ப் பொது நிலம் ஆக்க ஒத்துக்கொள்கிறீர்களா? என்றேன்.

'ஒத்துக் கொள்கிறோம்' என்றனர்.

'நிலமில்லாத நாங்கள் என்ன செய்வது?' என்றனர் சிலர். உங்களிடம் நிலம் இல்லையா? எங்களிடம் இருந்த

நிலம் விளைந்தது என்றால், தானாகவா விளைந்தது? நீங்கள் தாமே பாடுபட்டு விளையச் செய்தீர்கள். நீங்கள் இல்லாமல் நிலம் இருந்து என்ன செய்யும்? நீங்கள் வழக்கம்போல-வழக்கத்திற்கும் மேலாக-உழையுங்கள்! "உங்கள் நல்ல நிலம், நீங்கள் தான்" என்றேன். கை தட்டி இதனை வரவேற்றார்கள். தயங்கித் தயங்கிச் சொல்ல வந்தார் ஒருவர். அவர் நான் சொன்னேனே, 'கையிருப்பு உடையவர்' என்று, அவர். எனக்கு நிலம் இல்லை; கைக்காசு கொஞ்சம் உண்டு; நான் என்ன செய்வது? என்றார்.

உங்கள் காசு இன்று முதல் ஊர்ப் பொதுக்காசு, அதனைப் பாதுகாத்து ஊர்த்தேவைக்குப் பயன்படுத்தும் அறங்காவலரிடம் ஒப்படையுங்கள். அந்தக் காசை நீங்கள் மருத்துவம் செய்து தேடினீர்கள் என்பதை ஊர் அறியும். ஊரில் எது ஆனாலும் கண்டு கொள்ளாமல் ஊருநர்க்கு ஓடித் தேடினீர்கள் என்பது ஊர்க்குத் தெரியும். இனி நீங்கள் ஊர்க்கு மருத்துவம் பார்க்க வேண்டும். காசு வாங்காமல்; ஏன்? உங்களுக்கும் ஊர் தானே சோறு போடப் போகிறது. ஒற்றைக் கட்டையான நீங்கள் ஊரை ஒட்டியிருக்க இதுவரை கற்றுக் கொள்ளவில்லை. ஊரும் உங்களைக் கண்டு கொள்ளவில்லை. இனி ஊரின் நலங்காவலர் நீங்கள்; உங்களை நன்றாகக் காப்பது ஊர் நலம்; சரிதானே என்றேன்.

அன்றுதான் அவர் முதல் முதலாகச் சிரிப்பதை ஊரே கண்டது. அவரால் தான் சிக்கல் வரலாம் என நினைத்தோம்; ஆனால், எளிமையாகத் தீர்ந்துவிட்டது.

நான்மேலே சொன்னேன். எல்லார் வீட்டிலும் ஆடுகள் உள்ளன. ஓர் ஆடு, இரண்டு ஆடு வைத்திருந்தாலும் ஒருவர் மேய்க்க வேண்டியுள்ளது. இனி, அவை வீட்டு ஆடுகள் அல்ல. கூட்டுஆடுகள்- ஊர்ப் பொதுவுக்கான ஆடுகள். ஒருவர் அல்லது இருவர் மேய்த்தால் போதும். மற்றவர்கள் வயல்வேலை காட்டுவேலை பார்க்கலாம்.

வீட்டுக்கு வீடு சமைக்க வேண்டிய வேலை இல்லை. நாலுபேர் சமைக்கப் போதும். மற்றவர்கள் வேறு வேலை பார்க்கலாம்.

நம் ஊரிலாவது குழந்தைகளை வேலைக்கு வைக்கும் கொடுமையை மாற்றியாக வேண்டும். அவர்களுக்கு நம் ஊர்க்குத் தக்கபடி வாழ்க்கைக் கல்வி தரவேண்டும். எழுத்தறிவு உண்டாக்க வேண்டும். பள்ளிக்கூடம் தனியாக வேண்டியது இல்லை. ஊர்த்தோப்பு இருக்கிறது; ஊர் மடமும் இருக்கிறது. இவை போதும். போதாததற்குக் கோயில் கொட்டகையும் இருக்கிறது. சொல்லித் தர ஆள் வேண்டுமே என்பீர்கள். வெள்ளைக்காரன் பள்ளி, கொள்ளைக்காரன் பள்ளி என்று கொட்டிக் கொட்டிப் படித்துவிட்டு வெட்டியாய்த் திரிகின்ற இளவட்டங்கள் மூன்று பேர்கள் இங்கே இருக்கிறார்களே, எந்த வேலையும் செய்யத் திறமில்லாமல்! அவர்கள், இந்தப் பிள்ளைகளுக்குக் கற்பித்துத் தரவேண்டும். அவர்கள் படித்த படிப்பை ஒப்பிக்கக்கூடாது. ஊர்க்குப் பயன்படும் தொழில்கல்வி, வாழ்க்கைக் கல்வி தர வேண்டும். அந்தத் திறமையில், பத்து ஊர்களுக்குப் படிப்புச் சொல்லித் தரத்தக்க இவர் இருக்கிறார். இவர் வழிகாட்டுவார்;

நானும் சும்மா இருக்க மாட்டேன். நமக்கு வேண்டிய கல்வி கற்பிக்கப்படுகிறதா? பிள்ளைகள் சரியாகக் கற்று வருகிறார்களா? என்று அடிக்கடி வந்து பார்ப்பேன்.

"எனக்கு இன்னொரு வேலையும் உண்டு அன்றன்றைக்கு உலக நடைமுறையை அறிவதற்குச் செய்தித்தாள்கள் வருகின்றன. அவற்றில் ஒன்றிரண்டை ஊர்க்காக வாங்கி, ஆகாத குப்பைச் செய்திகளை ஒதுக்கிவிட்டு, ஆகும் நல்ல செய்திகளை மட்டும் ஊரறிய ஒலிபெருக்கியில் ஒவ்வொரு நாள் மாலையிலும் நான் சொல்வேன்" என்று என் வேலைகளையும் திட்டப்படுத்திச் சொன்னேன்.

◆ **அருமைபாட்டி! மிக மிக அருமையான திட்டங்கள் பாட்டி! உங்கள் காலடி மண்ணை அள்ளித் தலையில் போட்டுக் கொள்ளலாம் போல் உள்ளது.**

பார் தம்பி, இந்த வேலை வேண்டாம்! இப்படிப் பாராட்டிப் பேசிப் பேசிச் செயல்களை எல்லாம் கெடுத்ததுபோதும். ஒன்றுக்கும் ஆகாதவர்களையும்'ஓ ஓ' 'ஆ ஆ' என்று பாராட்டி உச்சிக் கிளைக்கு ஏற்றியதும் போதும்! உருப்படியாக என்ன செய்யலாம் என்பதைப் பார்.

◆ **பொறுத்துக் கொள்ள வேண்டும் பாட்டி! நான் போலித் தனமாகச் சொல்லவில்லை. நல்லதை வரவேற்றுப் பாராட்டுதல் வேண்டும். போலியைப் பாராட்டக்கூடாது. நல்லதைப் பாராட்டத் தவறவும் கூடாது என்பவை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு**

**முன் வாழ்ந்த - நம் மண்ணில் வாழ்ந்த - ஒரு பெரியவர் ஆணை!**

தம்பி, திருவள்ளுவரைத் தானே சொல்கிறாய்; அவர்

**"பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்**
**மக்கட் பதடி எனல்"** என்றும்

**"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**
**பண்புபா ராட்டும் உலகு"** என்றும்

சொன்னதைத்தானே சொல்கிறாய்

◆ **பாட்டி என்னைப் பொறுத்துக் கொள்ளுங்கள். நான் படியாதவள் என்றீர்களே, நீங்கள் திருக்குறளை எல்லாம் படித்தவர்கள் என்பதை நம்பவே முடியவில்லை! பாட்டி நீங்கள் இக்கால ஒளவைப் பாட்டியே தான்!**

பள்ளிக் கூடத்தில் படிப்பது தான் படிப்பு என்பது நம்மவர்கள் எண்ணம். பள்ளிக்குப் போய் எழுத்தைப் படித்து மறந்துவிட்டவர்கள் எத்தனை பேர். ஆனால் பள்ளிக்குப் போகாமலே படித்து உயர்வாக விளங்கியவர்கள் இல்லையா? நீ சொன்னாயே ஒளவைப் பாட்டி என்று; வயதால் ஒளவைப் பாட்டிதான்! நாடு விட்டு நாடு தூது போய், நாட்டு நலம் நாடிய அவர் பெருமை என்ன! அதிருக்கட்டும். இவ்வளவு நேரம் பேசியும் உன் பெயரைக் கூட நான் கேட்கவில்லை பார்! இப்படித்தான் எதிலும் ஒருப்போக்குதான். உன் பெயர் என்ன?

◆ ***என் பெயர் நல்ல தம்பி, பாட்டி!***

*நல்ல பெயர் தம்பி, நல்ல தம்பி. நீயும், பெயர்க்குத் தக்கபடிதான் உள்ளாய்.*

◆ ***பாட்டி மணி அடித்ததே என்ன?***

*அதுவா? அது இப்போது நேரம் 12 ½ சிறு பிள்ளைகளுக்கு எல்லாம் சாப்பாட்டு மணி இது. இப்பொழுது அடித்தது ஒரு மணி. பிறகு இரண்டுமணி அடிக்கும். காட்டில், வயலில் தோப்பு தோட்டங்களில் வேலை செய்பவர்க்குச் சாப்பாட்டு நேரம். மூன்று மணி அடித்தால் ஊர்க்குள் வேலை பார்ப்பவர்க்குச் சாப்பாட்டு வேளை! அப்பொழுது 1 ½மணி.*

◆ ***முதியவர்கள், முடியாதவர்களுக்குச் சாப்பாட்டு நேரம் எது பாட்டி?***

*அவர்களுக்கு மட்டும் மணி அடிக்காமல் அவரவர் தேவைக்குத் தக்கபடி, அவரவர் இருக்கும் முதியோர் நோயர் விடுதிக்கு உணவைக் கொண்டு போய்க் கொடுத்து விடுவார்கள். அவர்கள் பொது விடுதிக்கு வந்து சாப்பிட வேண்டியதில்லை.*

◆ ***ஓவியர்கள் வண்ணக்கோடு போடுவது போலவும், பூத்தொடுப்பவர் தேர்ந்து தொடுப்பது போலவும் எண்ணி எண்ணிச் செய்த திட்டங்களாக உள்ளன பாட்டி!***

*நீ திருக்குறளைப் படித்தவன் என்பதைப் புரிந்து கொண்டேன். அந்த ஒன்றைப் படித்தால் வாழ்க்கைக்கு வேறு என்ன வேண்டும்?*

வினைத்தூய்மை, வினைசெயல்வகை, வினைத்திட்பம் இந்த மூன்று அதிகாரப் பெயர்களையும் புரிந்து கொண்டால் செயல் செம்மையும் திறமும் தாமாக வராவா? நான் எழுதப்படிக்கத் தெரிந்தேன். எங்கள் அப்பாதான் என் ஆசிரியர். எங்கள் ஊரில் பள்ளிக்கூடம் இல்லை. ஏழை எளிய பிள்ளைகளுக்கு அவரே எழுத்தறிவு உண்டாக்கினார். தம்பி, தமிழறிவுக்கு எழுத்துத் தெரிந்து கொண்டால் போதுமே! எழுத்தைச் சொன்னால், சொல் தானாக வரும். பொருளும் தாய்மொழியாக இருப்பதால்-துள்ளிவந்துவிடும்! பாரேன்; எழுத்தைக் கற்றுக் கொண்டதும் அப்பா, திருக்குறளை என் கையில் கொடுத்து விட்டார். நான் படித்ததை அப்படியே மனப்பாடம் வைத்துக் கொண்டேன். அதுதான் எனக்குத் துணை, துணிவு எல்லாம். எங்களுக்குத் திருமணம் முடிந்தது. நாங்கள் எங்கேயும் தேனிலவு போகவில்லை. திருக்குறளை இரண்டு பேரும் சேர்ந்தே படித்தோம். அதுதான் எங்கள் தேனிலவு.

◆ **கடலுக்குள் கிடப்பவை எவை எவை என்பதைக் கண்டறிய முடியாத நிலை உண்டு. உங்களிடம் அடங்கிக் கிடக்கும் செய்திகள் அப்படித்தான் இருக்கின்றன. பாட்டி, உணவுத் திட்டத்தைச் சொன்னீர்கள். பயிரிடுதல் பற்றிச் சொல்கிறீர்களா?**

தம்பி, துண்டு துணுக்காவும், மேடு பள்ளமாகவும் ஓடை உடைப்பாகவும் கிடந்த நிலத்தையெல்லாம் ஊர் நிலம் ஆக்கிவிட்டால், அதில் பயிரிட ஒப்புரவு ஆக்க வேண்டும் அல்லவா! நிலத்திலே ஒப்புரவு இருந்தால்தானே பள்ளத்தில் நீர் தேங்கிப் பயிர் அழுகிப் போகாமலும்

மேட்டில் நீர் ஏறாமல் காய்ந்து போகாமலும் இருக்கும். அதனால் நாங்களே எந்த அளவுக்கு நிலத்தை எடுத்துக் கொண்டால் ஒப்புரவாகக் கிடைக்குமோ அந்த அளவுக்கு எடுத்துக் கொண்டு பயிரிட்டோம். ஒரு பக்கம் பயிர் செய்யவும், இன்னொரு பக்கம் ஒப்புரவு வேலை நடக்கவும் ஏற்பாடு செய்தோம்.

தவசப் பயிரோடு காய்கறித் தேவையை நிறைவேற்றும் வகையில் தோட்டத்தையும் உண்டாக்கினோம். நம் மண்ணுக்குத் தக்கதாகவும், நம் பழக்கத்திற்கும் சிக்கனத்திற்கும் தக்கதாகவும் அமைந்த பயிர்களையும் காய்கறிகளையுமே பயிரிட்டோம். பணப் பயிர்களில் கருத்து வைக்காமல் உணவுத் தேவையை நிறைவேற்றும் பயிர்களையே செய்தோம். ஆனாலும், ஊர்க்கே உணவளிப்பது எளியது இல்லையே! முதல் விளைவு காணவும் தன்னிறைவு அடையவும் எவ்வளவோ பாடுபட்டோம்! ஊருக்குப் பொதுவாக நிலம் ஆயின், ஊர்க்குப் பொதுவாக உணவு ஆயின், ஊரில் இருக்கும் தவசம் எல்லாம் பொதுத் தவசம் தானே! அதனால் ஊர் தாக்குப் பிடித்தது. முதல் விளைவு வந்ததும் ஊர்க்காரர்க்கே நம்பிக்கை உண்டாகிவிட்டது. ஊர் விளைவுக்கு இடம் போதும். வேலை பார்ப்பதற்கும் ஆள் போதும்; என்று ஆனதும், பயிரிடுவதற்கு வராத நிலத்தையும் பண்படுத்த வாய்ப்பு ஏற்பட்டது.

யாரும் யாரையும் ஏவாமல் வேலை! யாரையும் ஏமாற்ற நினையாமல் மனச் சான்றுடன் பார்த்த வேலை! அவரவர் வேலையை அவரவரே செய்வதே தவம் என்றாகிய வேலை! அந்நிலையில் வீட்டில் முடங்கிக்

கிடந்த பெரியவர்களும் ஊர்த் துப்புரவு, உழவுத் துணைத் தொழில், சமையல் உதவி என்று ஆர்வமாக ஈடுபட்டனர். அவர்கள் ஆர்வம் மற்றவர்களையெல்லாம் ஊக்கப்படுத்தி உழைக்க வைத்தது.

வேலைக்கு ஓய்வும் வேண்டுமே! வழிவழியாக வந்த கும்மியாட்டம் கோலாட்டம் ஒயிலாட்டம் சிலம்பம் வில்லடி கதைப்பாட்டு என மாலைப் பொழுதிலும் நிலா நாளிலும் பொழுதுபோக்குகள் உண்டாக்கினோம். ஒருவர்க்கு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு வேலை, படிப்பு, பொழுது போக்கு ஆகியவற்றில் ஈடுபட்டோம். அது வாழ்க்கையில் ஒரு சுவையை - ஒரு நிறைவை - உண்டாக்கிற்று. "வெந்ததைத் தின்று விதி வந்தால் போவது" என்னும் வெற்றுப் பேச்சை இருந்த இடம் தெரியாமல் ஓட்டியது! வாழ்க்கையின் பொருள் நன்றாகப் புலப்படலாயிற்று!

ஊர்க்கு மருத்துவ வாய்ப்பு வேண்டியிருந்தது. ஊரில் கொல்லுப் பட்டடை தச்சுப்பட்டடை இல்லை. சலவை செய்ய முடிதிருத்தத் தேவை இருந்தது. இவற்றுக் கெல்லாம் ஏற்பாடு செய்யாமல் எப்படி நாங்கள் ஊரை நம்பி வாழமுடியும்?

அறங்காவலரிடம் ஊருக்காகப் பணம் இருக்கத்தான் செய்தது. அதனை எப்பொழுதும் எதற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். அப்பணமே குறியாக வாழ்ந்தால் 'இட்டடி முட்டடி' களுக்கு, என்ன செய்வது? என எண்ணினோம். இவற்றையெல்லாம் ஒரே படியாகச் செய்ய ஊரைத்தான் நம்பியாக வேண்டும். யார் ஒருவரையும் நம்பியாக முடியாது. துணி வெளுப்புக்குத் தனி ஏற்பாடு இல்லாமல்

செய்து கொள்ளலாம். ஆர்வம் உள்ள ஒரு பிள்ளை முன்வந்தான். நான் முடிவெட்டப் படித்துக் கொண்டு வருகிறேன்; ஒரு மாதம் வெளியூர்க்குப் போய்ப் படித்தால் போதும். பின்னால் அதனை நாமே நிறைவேற்றிக் கொள்ளலாம். எனக்குத் தெரிந்த தொழிற் கல்வி கற்ற நண்பர்கள் இருவர் இருக்கிறார்கள். அவர்கள் இருவரும் நம் திட்டத்தை ஏற்றுக்கொண்டு வேலை செய்ய ஒப்புக் கொண்டால், அவர்களுக்குப் பட்டடை அமைத்துத் தந்து பயன்படுத்திக் கொள்ளலாம் என்றான். 'உன்னைத் தண்டச் சோறு' என்றார்கள்! நீ தான் 'தங்கக்கட்டி! உன்னைப் போல இளைஞர்கள் துணிந்து விட்டால், வள்ளுவர் கண்ட 'நாடென்ப நாடாவளத்தன' என்னும் நாட்டையே படைத்து விடலாம்! உன் பெயர் அன்பு. மெய்யாகவே நீ அன்பு வடிவம் தான் என்று சொல்லிவிட்டு, அன்பு தன் தலைமேல் கடமையை அள்ளிப் போட்டுக் கொண்டதைப் பார்த்தீர்களா? நாம் பார்த்துக் கொண்டே இருப்பதா? என்றேன்.

"மருத்துவமனை, ஓய்வு இல்லம்,தச்சு கொல்லுப் பட்டடை இவற்றை நம் உழைப்பாலும் ஊரிலுள்ள பொருள்களாலும் மட்டுமே செய்துவிட முடியாது. பணம் வேண்டும். அதற்கும் நாம் நினைத்தால் பஞ்சம் இல்லை! நாம் அறியாமலே நம் கையிருப்பு இருக்கிறது.

வாய்க்கு வயிற்றுக்கு இல்லாமல் போனாலும் கழுத்திலும் காதிலும் கையிலும் காலிலும் மூக்கிலும் பூட்டிப் பார்ப்பது பெண்கள் வழக்கமாகிவிட்டது. இது, இன்றை வழக்கம் இல்லை. நெட்ட நெடுங்கால வழக்கம். அவ்வழக்கமே பெண்களை அடிமைப்படுத்தி, அஞ்சும்

கோழைகளும் ஆக்கி வைத்துவிட்டது. இன்றும் அந்த நிலை நமக்கு வேண்டாம்.

இதோ, என் கழுத்தில் காதில் கையில் இருப்பவற்றை எல்லாம் வீட்டில் பூட்டி வைத்திருப்பவை எல்லாம் - கழற்றியும் எடுத்தும் தந்துவிடுகிறேன். அப்படியே நீங்கள் ஒவ்வொருவரும் செய்யத் துணிந்தால் சிறிது சிறிது என்றாலும், நம் தேவைக்கு மேல் பணம் கிடைத்துவிடும்! என்று சொல்லி, என் அணிகலன்களையெல்லாம் கழற்றி வைத்தேன். அப்படியே மற்றவர்களும் செய்ய முன்வந்தார்கள்.

உடல் நலத்திற்கும் தொழில் வளத்திற்கும் கல்விக்கும் உதவாத ஒரு பொருள் பொருளாகுமா? நம் வருங்கால மக்களுக்கு நாம் இந்த வழிகாட்டுவது இயல்பானதுதானே. இனிமேல், நம் ஊரில் பிறக்கும் பிள்ளை ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும், காதிலும் மூக்கிலும் துளையிடும் வழக்கத்தைக் கொள்ளமாட்டோம் என இப்பொழுதே உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். நம் உடலில் தேவையான இடங்களில் எல்லாம் துளையமைத்த இயற்கை மூக்கிலும் காதிலும் அணிகலம் போடுவது தேவை என்றிருந்தால் அவ்விடங்களில் துளையுடன் படைத்திருக்காதா'? என்றேன். ஒருவர் பாக்கி இல்லாமல் பொன்னகையைக் கழற்றி வைத்துப் புன்னகை புரிந்தார்கள். இப்படி ஒவ்வொரு தேவையையும் ஊரைக் கொண்டே நிறைவேற்றினோம்.

எங்களுக்கு வேண்டிய துணியை நாங்கள் உண்டாக்கிக் கொள்ள முடியவில்லை. எண்ணெய்

வகைகளையும் சில கருவிகளையும் நாங்களே உண்டாக்கிக் கொள்ள முடியவில்லை. அவற்றை வாங்கியாக வேண்டும். அதனால் எங்கள் தேவைக்கு மேலாகத் தவசம் காய்கறி ஆகியவற்றைப் பயிர் செய்தோம். பழமரங்கள் தென்னை முதலியவற்றைப் பெருக்கினோம். பால் எங்கள் தேவைக்கு மேல் பெருக வழிகண்டோம். பசுந்தாள் உரத்தை இடப் பழகினோம். கூடிய அளவும் மாட்டுச் சாணம், ஆட்டுப்புழுக்கை ஆகியவற்றையும் சேர்த்து உரமாக இட்டோம். இந்த முறையால் எங்கள் தேவைக்கு மேல் விளைந்தவற்றை விற்று, எங்கள் தேவைப் பொருள்களை வாங்கினோம். பழங்காலப் பண்டமாற்று முறை இதுதானே! எங்கள் தேவைக்கு மேலேயும் மிக விளைவு உண்டானால் - எதிர்காலப் பாதுகாப்புக்கு - அறங்காவலரிடம் சேர்த்து வைத்தோம். அறங்காவலராக வாய்த்தவர் செல்வ நம்பி. அவர் மெய்யாகவே நம்பத்தக்க 'தக்காராக' விளங்கினார். அவர்க்குத் துணையாக ஒருவரை வைத்துப் பயிற்சியும் தந்தார்.

**◆ நிலம் வீடு எல்லாம் ஊர்ப்பொது ஆக்கி விட்டீர்கள், வரிகட்டுதல் பட்டா ஆக்குதல் ஆகியவை எல்லாம் எப்படிச் செய்தீர்கள்**

கேட்க வேண்டிய செய்திதான். எப்பொழுது சொத்தெல்லாம் ஊர்ச்சொத்து என்று பேசி முடித்து விட்டோமோ அப்பொழுதே சொத்துரிமை பட்டா வரிக்கணக்கு எல்லாமும் வாழவந்தாள்புரம் என்னும் ஊர்ப்பெயராலேயே ஆக்கிப் பதிவு அலுவலகத்திலும் பதிவு செய்துவிட்டோம்.

◆ **இதனால் பின் சிக்கல் வராதா?**

எந்தச் சிக்கலுக்கும் தீர்வு இல்லாமல் போகாதே! யாரோ ஒருவர் ஊரை விட்டு வெளியேற வேண்டும் என்று நினைத்தால் அவர் வேலை பொறுப்பு ஆகியவற்றை ஊரவர் ஒப்புதலுடன் ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டுப் போய்விடலாம். அவர் போவதற்கு ஊர் ஒத்துக்கொள்ளும். அல்லாமல் அவரே தம் பொறுப்பை எவரிடமாவது ஒப்படைத்து விட்டுப் போகவோ, ஊரில் இருந்து 'தம் பொருள்' எனக் கொண்டுபோகவோ, நினைத்த போது, ஊர் ஒப்புதல் இல்லாமல் மீண்டும் ஊரில் குடியிருக்க வரவோ முடியாது.

◆ **ஊரைவிட்டுப் போனவர் மீண்டும் வருவதற்கு ஊர் ஒப்புதல் தருவதும் உண்டா பாட்டி?**

அப்படியும் தேவை ஏற்படலாம். இதுவரை அப்படி நேரவில்லை.

◆ **அந்தத் தேவை எப்படி ஏற்படலாம் என்று நினைக்கிறீர்கள்?**

இவ்வூர் ஒரு குடும்பம்; ஒரு கூட்டுக் குடும்பம்; இந்தக் குடும்பத்திற்குள்ளாகவே கொண்டு கொடுத்தல் வைத்துக் கொண்டால் நெருக்கமணத்தால் உண்டாகும் உடல்குறை, உளக்குறை, வளர்ச்சி போதாமை என்பவை எல்லாம் ஏற்பட்டு விடும். அதனால் வேறு வேறு இடங்களில்தான் கொண்டு கொடுத்தல் வைத்துக் கொள்ள வேண்டும். அந்நிலையில் இவ்வூரார் வெளியே செல்லவும். வெளியூரார் உள்ளே வரவும் கட்டாயத் தேவை ஏற்படும் அல்லவா!

◆ **ஆமாம் பாட்டி! அதற்காக என்ன திட்டம் வைத்துள்ளீர்கள்?**

இவ்வூர்த் திட்டத்தை ஏற்றுக் கொள்ளும் குடும்பத்தில் கொண்டு கொடுத்தல் செய்து, அவர்களும் ஊராகிக் கொள்ளலாம்! அவ்வுறவை ஊரும் ஏற்றுக்கொள்ளும்.

அவ்வாறே வெளியூர்க்குச் சென்று மணம் செய்து கொள்ள விருப்பம் தெரிவிப்பின் அதனை ஊர் ஏற்றுக் கொண்டு ஒப்புதல் தரும். வந்தவர்கள் வெளியேற வேண்டும் என்றோ, போயவர்கள் மீண்டும் வரவேண்டும் என்றோ ஏற்படும் நிலையில் ஊரவர் அனைவரும் கூடி எடுக்கும் முடிவே முடிவாகும். ஏனெனில், ஊராட்சிக்கு என மூவர் குழு உண்டு. அவர்கள் முடிவு, இப்படிப்பட்ட வகைகளுக்கு ஏற்கப்படமாட்டாது.

◆ **பாட்டி, ஊருக்கு வருவதற்குச் சாலை இருந்தும் வண்டி வாய்ப்பு இல்லை. மூன்று கல் தொலைவு நடந்தே வந்தேன். இப்பொழுது பேருந்து ஒலி கேட்கின்றதே!**

தம்பி, பேருந்து இல்லை. எங்கள் நெருக்கடித் தேவைக்காக ஒரு மகிழ்வுந்து வைத்துள்ளோம். அது மருத்துவர் வண்டி. முன்னல் அவர் போய்வர இருந்தது. இப்பொழுது ஊர்க்கு அது பயன்படுகிறது. இங்கேயே பேறுகாலம் பார்க்கும் ஒரு பெண் உள்ளார். அவர் முன்னர் வெளியூரில் வேலை செய்தார். இப்பொழுது அவர் இங்கேயே தங்கிப் பெண்கள் குழந்தைகள் மருத்துவம் பார்க்கிறார். அவரால் முடியாத பிள்ளைப்

பேறு இருந்தால் அவரே இவ்வண்டியில் அப்பெண்ணை அழைத்துக் கொண்டு போய் மருத்துவம் பார்த்துவர அவ்வண்டி உதவுகிறது. அதன் ஒலிதான் இப்பொழுது கேட்டது. சரி, நாம் சாப்பிட வேண்டிய நேரம் வந்து விட்டது. மணி மூன்று முறை அடித்தது அல்லவா! வா, நாம் சாப்பிடப் போகலாம்.

- **கண்ணம்மா சாப்பிட வேண்டாமா?**

அவள் உணவு நேரம், முதல் மணி நேரம். அவள் உணவை முடித்து விட்டுப் பரிமாறுபவர்க்குத் துணையாக இருப்பாள்.

(உணவுக் கொட்டகையில் உண்கின்றனர்)

- **பாட்டி கூட்டுச் சாப்பாடு போலவே இல்லை. வீட்டுச் சாப்பாடு போலவே உள்ளது! மசாலை மிகுதியாக இல்லை. உப்பு உறைப்பு புளிப்பு எல்லாமும் மட்டாகவே இருக்கிறது. உணவு வகையும் இயல்பானது; கெடுதி இல்லாதது. அது மட்டும் இல்லை.**

பிறகு என்ன?

- **உணவு பற்றி எழுதிப் போட்டுள்ளது மிக இனிக்கிறது.**

என்ன இனிக்கிறது?

- **சாதம், ரைசு என்றே கேட்டதற்கு மாறாகச், சோறு மணக்கிறது. பருப்புக் குழம்பு, மிளகு சாறு, வெண்டைக்காய்ப் பொரியல், ஊறுகாய், மோர், வற்றல் என்று எழுதியுள்ளதை நினைக்க இனிக்கிறது.**

அப்பா, இது தாய் நாடு; இதன் மொழி தாய்மொழி; சொத்து, தாயம்! இந்நாட்டில் இம்மொழியில் இயல்பாக இருக்க வேண்டிய இதனைப் பார்த்து, உனக்கு இனிக்கிறது என்றால், வெளியே கசப்புகள் எவ்வளவு உள்ளன என்பது விளங்குமே! தாய்மொழியை மதியாத ஒரு பிறவி, தாய் தந்த பிறவியாக இருக்க முடியாது!

- **பாட்டி, உண்பதற்கு முன் ஏதாவது வழிபாடு உண்டா?**

முதல் பந்திக்கு வரும் சிறுவர்களே வழிபாடு செய்து விடுவார்கள். ஆதலால் வழிபாடு இப்பொழுது இல்லை.

- **வழிபாடு என்ன பாட்டி?**

**"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றும் கொல்லோ உலகு"**

**"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு"**

**"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு"**

**"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்"**

**"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்"**

என்னும் ஒப்புரவுக் குறள்கள் தாம் எங்கள் வழிபாடு. உண்டு முடிந்ததும் ஒவ்வொரு முறையும்,

**"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"**

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்"**

என்று பாடுவர். இது தனியே பாடுதல் இல்லை. சேர்ந்து பாடுதல் ஆகும். சேர்ந்து பாடி முடித்த பின்னரே அனைவரும் எழுவார்கள்.

◆ **இங்கே கோயில் கொண்டாட்டம் உண்டா பாட்டி,**

உண்டே! கோயில் என்றால் நீ மற்ற இடங்களில் பார்க்கிறபடி கோட்டை கோபுரம் திருச்சுற்று பெரிய பெரிய சிலைகள் இங்கே இல்லை. ஊர் மன்றம் கூடுவதற்கு ஒரு கொட்டகை உண்டு. அதில் தகரப் பெட்டியில் கண்ணாடிச் சட்டம் அமைத்த விளக்கு உண்டு. அவ்விளக்கு வழிபாடு தான் இங்கே கோயில் வழிபாடு. எந்தச் சமயமாவது விளக்கை- ஒளியை - வழிபடாமல் உள்ளதா? ஆதலால் எல்லாச் சமயங்களுக்கும் ஏற்ற ஒளிவழிபாட்டை வள்ளலார் இந்த மண்ணுக்கு உண்டாக்கித் தந்தார். சிக்கலற்ற அவ் வழிபாட்டை நாங்கள் சிக்கெனப் பற்றிக் கொண்டோம். வள்ளலார் காட்டிய வழியில் ஒளி வழிபாடு ஏற்றுக் கொண்ட நாங்கள் வள்ளுவர் காட்டிய வழியில்,

**அகர முதலாம் ஆதியே போற்றி**
**மலர்மிசை ஏகும் மாணடி போற்றி**
**தனக்குவமை இல்லாத் தகையடி போற்றி**
**எண்குணத் திலங்கும் இறையே போற்றி**
**அமிழ்த மழையாம் அருளே போற்றி**
**ஐம்பொறி அடக்கும் ஆற்றலே போற்றி**
**நிறைமொழி அருளும் நிறைவே போற்றி**

**குணமெனும் குன்றே குறியே போற்றி**
**மனத்தில் மாசிலா மணியே போற்றி**
**வாழ்வாங்கு வாழும் வாழ்வே போற்றி**

எனப் போற்றி இசைக்கிறோம். அமைவாக இருந்து உள்ளுகை (தியானம்) நடத்துகிறோம். இம்முறையை ஒவ்வொரு நாள் இரவு உணவுக்கு முன்னும் செய்வதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளோம். முதியவர்கள் விருப்பம்போல் வந்து ஓய்வாக ஒளி வழிபாடு செய்வர். அவர்களுக்குப் போற்றி அச்சிட்டுத் தந்துள்ளோம். அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கேட்டுப் பலர்க்கும் மனப்பாடமே ஆகிவிட்டது. ஆதலால் காட்டில் கரையில் வீட்டில் வெளியில் வேலை பார்ப்பவர்கள் வாயும் இப்போற்றியைக் கூறிக் கொண்டே அவரவர் கடமைகளைச் செய்வதைக் காணும் போது தனி இன்பமே உண்டாகின்றது.

- **வழிபாடு கட்டாயத் தேவையா பாட்டி?**

ஏன், தேவை இல்லை என்கிறாயா? பெயர் வைக்க, சோறு ஊட்ட, பள்ளிக்கு வைக்க, பூப்புநீராட்ட, மணம் நிகழ்த்த என்று எத்தனை எத்தனை சடங்குகளை வைத்துள்ளோம். அப்படிப் பழகிவிட்ட நமக்கு வழிபாடும் போற்றியும் தேவைதான்.

ஒரு பெரியவர்க்குச் சிலை படத்திறப்பு ஆண்டுவிழா என்று கொண்டாடுகிறோம். இன்னார் தலைமை முன்னிலை வாழ்த்துரை சிறப்புரை வரவேற்பு நன்றி மாலை சூட்டு என்று ஏன் செய்கிறோம்? பொலிவாகவும் நிறைவாகவும் இருக்க வேண்டும் என்பதுதானே அது. அப்படிப்பட்டது தான் இது. கடவுள் நம்பிக்கை என்பது

தன்னம்பிக்கை; ஆனால் அக்கடவுள் நம்பிக்கை, தன்னம்பிக்கையை இழக்கச் செய்து கண்மூடித் தனத்தை வளர்ப்பதாக இருக்கக் கூடாது. எங்கள் போற்றி எங்களைத் தூய்மை செய்து பண்பாட்டை நினைவூட்டி நிலைப்படுத்துவதாக இருப்பதால் தேவை என்றே எண்ணுகின்றோம். செய்கின்றோம்.

◆ **பாட்டி, இது சிறிய ஊர்; இதனால் எளிமையாக உங்களால் எல்லாம் செய்ய முடிந்தது. பெரிய ஊரானால், நகரானால் இப்படிச் செய்ய வாய்க்குமா?**

நீ சொல்வது சரிதான். சுருங்கிய அளவில் ஓர் ஆய்வகத்தில் செய்யும் ஆய்வுதானே, உலகமெல்லாம் பரவுகின்றது. நல்லது, செய்யத்தக்கது என்று ஏற்றுக் கொண்டால் தானாகவே பரவி விடுமே! ஒப்புக்கொண்டு, உலகப் பொருளாகி விடுமே! அதனால் சிறிய ஊரில் ஒன்றை நடைமுறைப்படுத்தி விட்டால் படிப்படியே பல ஊர்க்கும் பரவத்தானே செய்யும். நல்லபொருள் அடுத்த ஊரில் கிடைக்கிறது என்றால் தேடிப் போய் வாங்கிக் கொள்கிறோம் அல்லவா!

◆ **ஆம் பாட்டி! முற்காலத்தைப் பார்க்கிலும் இக்காலத்தில் ஒன்றைப் பரப்புவதற்கு வாய்ப்புகள் உள்ளன. அவை மட்டும் நல்லதைப் பரப்ப விரும்பினால் விரைவில் எதிர்பார்த்ததற்குமேலேயும் பயன்விளையும். ஆனால் நூறு கேடுகளுக்கு இடையே ஒரு நல்லதைச் சொன்னால் அது எடுபடாமலே போய்விடும். தேடித் தேடிப் போய்த் தீமையை எடுத்துக்காட்டும் இவை, தேடிவந்த**

**நல்லதற்குக் கூட இடம் தருவது இல்லை. இவை திருந்திவிட்டால் நாடு கட்டாயம் திருந்திவிடும். பாட்டி, வழிபாடு பற்றிச் சொன்னீர்கள். விழா ஏதாவது கொண்டாடுவது உண்டா?**

உண்டே! கடந்த மாதம் ஒரு விழா நடத்தினோம். விழா என்றால் வாண வேடிக்கை மேளதாளம் எனச் செலவு செய்ய மாட்டோம். வழக்கமான உணவுடன் ஒன்றிரண்டு சிறப்பு உணவு. முழு நிலவு நாளில் நிகழும் கலை நிகழ்ச்சிகளுடன் ஆடல் பாடல் என்பவை நிகழும். இங்கே இரண்டு பெரியவர்கள் எண்பது வயது கடந்தவர்கள். அவர்களுக்குப் 'பெருமூதாளர்' எனச் சிறப்பு வழங்கினோம். புத்துடை தந்து பாராட்டினோம். அவர்களுக்காக வழிபாட்டு நிகழ்ச்சியில் 108 போற்றிகளையும் கூட்டிசையாகப் பாடிப் போற்றினோம். ஒவ்வொருவரும் அவர்களை வணங்கி அவர்களிடம் வாழ்த்துப் பெற்றோம். அவர்களுக்கே இப்படிப் பெருமையான ஒன்று தம் முதுமையில் ஏற்படும் என்று தோன்றவில்லையாம். அவர்கள் இளமைக் காலத்தில் இருந்த ஊர் நிலையையும் இன்றைய ஊர் நிலையையும் அவர்கள் சொல்வதைக் கேட்ட போது நம் சாதனை பெரிது; இதை மேலும் பொலிவோடும் வலிவோடும் கட்டிக் காத்தாக வேண்டும் என்னும் தெளிவு ஊரவர்க்கெல்லாம் ஏற்பட்டது.

ஊர்க்கெல்லாம் பொதுவிழா பொங்கல் விழாவே; அவ்விழாவை மூன்று நாள்கள் நடத்துவோம். அவ்விழாவில் ஊரில் உள்ள அனைவருக்கும் புத்துடை உண்டு. பொங்கல் உண்டு. காலையில் நிகழும். அன்று

மாலையில் ஊரவை கூடி அப்பொங்கல் வரை செய்ததையும் அடுத்த பொங்கல் நாளுக்குள் செய்ய வேண்டியதையும் திட்டமிடுவோம். ஆண்டுத் திட்டம் அது, முதல் நாள் மனைப் பொங்கல்.

அடுத்த நாள் மாட்டுப் பொங்கல் அல்லது உழவுப் பொங்கல். அன்று திருவள்ளுவர் படத்தை அழகுபடுத்திய வண்டியில் வைத்து ஊர்வலம் வருவோம். இசை கூத்து ஆட்டம் என்பனவெல்லாம் உண்டு. வாலியர்களும் பெரியவர்களும் தங்கள் உடல் வலுப்போட்டிகளில் ஈடுபடுவர்.

மூன்றாம் நாள் காலையில் குழந்தைகள் விழா! அவர்கள் பேச்சு, எழுத்து, கலைத்திறம், செயல்திறம் ஆகியவற்றை அறிந்து பரிசு பாராட்டு வழங்கும் விழா. மாலையில் மகளிர் விழா நிகழும். கோலம் தையல் குழந்தை வளர்ப்பு மருத்துவ உதவி சமையல் திறம் ஆடல் பாடல் திறம் ஆகியவற்றை ஊக்கப்படுத்தும் வகையில் பரிசு பாராட்டு வழங்கப்படும். அவர்களே, கட்டிய பாடல், கதை ஆகியவற்றை மதிப்பிட்டுச் சிறப்பிப்பதும் உண்டு.

**◆ பொழுதுபோக்குக்கு விளையாட்டிடம், பூங்கா என உண்டா பாட்டி?**

ஊர்க்குழந்தைகள் விளையாட்டுக்கென ஓரிடத்தை ஒதுக்கியுள்ளோம். பெண்பிள்ளைகளுக்கெனவும் அவ்விடத்தில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. பழங்கால விளையாட்டுகளையெல்லாம் நாம் மறந்து விடாமல் இருக்க மொழி ஞாயிறு பாவாணர் “தமிழ் நாட்டு விளையாட்டுகள் என்றொரு நூல் எழுதியுள்ளார். அதில்

ஆண்கள் பெண்கள் விளையாட்டுகள்'' எல்லாமும் விளக்கமாக உள. அழிந்து கொண்டிருக்கும் நம் பழைய விளையாட்டுகளை அழியாமல் காக்க உதவுகின்றது அது.

பூங்கா என்று பார்வைச்செடி வெட்டுச்செடிகளை வைத்து வளர்க்காமல் மணம் தரும் செடி கொடிகளையும், பயன்தரும் பழமரங்களையும் மருந்துக்குப் பயனாகும் மரம் செடி கொடிகளையும் வளர்க்கிறோம். அவற்றை வளர்க்கும் இடத்திலேயே உட்காரவும் உலாவவும் ஓய்வாகச் சாய்ந்து கொள்ளவும் திண்டுகள் அமைத்துள்ளோம். நிழல் மரங்களை அமைத்து அதன்கீழ் படிக்க எழுத ஓய்வு கொள்ள வாய்ப்பும் கண்டுள்ளோம். இவற்றைப் பாதுகாக்க ஆள்கள் உண்டு. ஆனால் அவர்கள் பாதுகாப்பு, "மிதியாதே", "பறியாதே", "ஒடியாதே" என்பதாக இராது. தண்ணீர் விடுதல் பந்தல் அமைத்தல் என்பதாகவே இருக்கும். பொதுச் சொத்தைப் பாதுகாக்கும் வகையைப் புரிந்து கொண்ட ஊரில் பொதுச் சொத்தை அழிப்பவர் இருப்பரா? ஏதாவது குறை என்றால் முதலாவது எவர் பார்த்தாரோ அவரே அதனைச் சரிப்படுத்தி விடுவார்.

◆ **பாட்டி இப்பொழுது வீடுகள் எல்லாம் ஏறக்குறைய ஒத்த அளவில் ஒத்த அமைவில் உள்ளன. முன்னே இப்படி இருந்திராதே.**

ஆம்! முன்னே பெரிதும் சிறிதும் கூரையும் காரையும் ஓடும் தகரமும் என்று பல வகையில் தான் வீடுகள் இருந்தன. முதலில் அவரவர், அவரவர் இருந்த வீட்டிலேயே இருந்து கொண்டு பொது உணவைக் கொள்ள வேண்டும் என்றே திட்டப்படுத்தினோம்.

அத்திட்டத்துடன் உடனடியாகச் சில வீடுகளை மாற்றியே ஆக வேண்டும் என்ற நிலைமையில் இருந்த வீடுகளை மட்டும் திட்டமிட்டு மாற்றினோம். எல்லா வீடுகளும் எப்படி இருக்க வேண்டும் என்று எண்ணினோமோ அவ்வகையிலேயே வீடுகளைத் திட்டமிட்டுக் கட்டினால் ஓரமைப்பு வீடாகி விடும் என்பதால் அப்படி மேற்கொண்டோம்.

இந்த ஊரில் ஓர் இயற்கை வாய்ப்பு உண்டு. அதனை இங்கே தொடக்க நாளில் பயன்படுத்தினர். பின்னர்ப் பக்கத்து ஊர்களைக் கண்டு அந்த வாய்ப்பைப் பயன்படுத்தாது விட்டு விட்டனர்.

மண்ணால் சுவர் எழுப்பி மரத்தால் உத்தரம் கம்பு ஆகியவற்றைக் கிடையாகச் சுவர்மேல் பரப்பி, அதன்மேல் இவ்வூர் மண்ணை நன்றாகக் குழைத்துப் பரப்பி விட்டால் அம்மண் எவ்வளவு பெரிய மழைக்கும் கரைவது இல்லை. கன்மாவைப் போலவே தாங்கும். அதற்குமேல் மாடி எடுத்துக் கட்டிய வீடுகளும் உண்டு. அம்முறையை நாம் பயன்படுத்த வேண்டும் என முடிவு செய்து கட்டினோம். படிப்படியே எல்லா வீடுகளையும் அத்திட்டத்தின்படி கட்டினோம். சில வீடுகள் காரையால் கட்டப் பட்டவையாக இருந்தன. அவற்றை ஊர்ப் பொதுப் பயனுக்கு ஆக்கிவிட்டு அங்கு இருந்தவர்களையும் புதிதாகக் கட்டிய வீடுகளில் குடியிருக்கச் செய்தோம்.

◆ **எல்லா வீடுகளும் சம அளவில் இருந்தால் பெரிய குடும்பத்தவர்கள் தங்குவதற்கு இடைஞ்சலாக இருக்குமே பாட்டி!**

அப்படி ஆகாமல் இருக்க வீட்டை இரண்டு வகைகயில் அமைத்தோம். நான்குபேர் தங்குவதற்குரிய

வீடு; அதற்கு மேற்பட்டோர் தங்குவதற்குரிய வீடு என்பவை அவை. இடத்தின் அளவால் தான் பெரியது சிறியது அன்றி, உள்ளே அமைப்பு எல்லாம் ஒன்று போன்றதேயாம்.

படுக்க இருக்க ஓர் அறை; குளிப்பு கழிப்பு வாய்ப்புக்கு ஒரு பகுதி. சமையல் சாப்பாடு பொருள் வைப்பு ஆகியவை தாம் இங்கு இல்லையே!

- **இங்கிருப்பவர்க்கு உறவினர் நண்பர் விருந்தினர் வருவார்கள் அல்லவா?**

ஆம் வருவார்கள். அவர்கள் விரும்பியவர்களை அவர்கள் வீட்டில் கண்டு பேசலாம்; ஆனால் ஊர்க்கு வருபவர்களை ஊரவை ஏட்டில் பதிவு செய்தல் வேண்டும். வந்த நேரம் புறப்படும் நேரம் பார்க்கவேண்டியவர் பெயர் ஆகியவற்றைப் பதிதல் வேண்டும்.

- **அதனால் என்ன பயன் பாட்டி?**

பயன் உண்டு! யார் யார்க்கு எவரெவர் தொடர்பு; அவர் வந்தது எதற்காக; இங்கே கண்டவற்றுள் எவை எவை அவர்க்கு ஏற்புடையவை; எவையேனும் மாற்றியமைப்பின் மேலும் நலம் தருமா! அவர் வந்து சென்றபின் புது விளைவு ஏதாவது உண்டா? - இவற்றை அறிய உதவும். அக்கருத்துகள் ஊரவையில் வைக்கப்படும். நலக்காப்புக்கு உதவும். இங்குள்ள கட்டுக்கோப்பைக் குலைக்கவும் சிலர் துணைபோகி விடக்கூடும் அல்லவா? ‘பகைகளுள் எல்லாம் கெடுபகை உட்பகை’ என்பதும், எள்ளளவே ஆன உட்பகையும் உள்வாங்கு புதைமண் புதைமணல் போலத் திட்டத்திற்குக் கேடு செய்து

விடக்கூடுமே. ஆதலால் ஊரவர் விழிப்புக்கு இக்குறிப்பு தேவைப்படுகின்றது. எத்தனை நாடுகள் இவ்விழிப்பு இல்லாமல் கெட்டிருக்கின்றன; அரசுகள் வீழ்ந்திருக் கின்றன. திட்டத்தின் நலம், திறமாகச் செயல்படுதலில் தானே உள்ளது. தேன் என்று எழுதினால் எழுதிய கை இனிக்குமா? சொன்ன வாய் இனிக்குமா? திட்டங்கள் பல இப்படித்தான் சொல்லளவில் நின்று போலி முகம் காட்டிக் கொண்டுள்ளன.

◆ *நல்ல புரட்சிச் செய்தி பாட்டி!*

*இது நல்ல புரட்சி என்றால், எதுதான் புரட்சியில்லை; சொல்லே நடிப்பே புரட்சியாகி விட்டதால், புரட்சிப் பொருளே செத்துவிட்டது இல்லையா? நாம் உண்மையாகச் சொல்லி உண்மையாகச் செயல்படுத்தும் இது, நாம் சொன்ன ஒப்புரவு. புரட்சி என்றால், முழுமையாக மாற்றி அமைப்பது. அதில் வன்முறைக்கும் இடமுண்டு; முட்டுதல் மோதுதல் உண்டு. இது அவரவரை உணரச் செய்து உருவாக்கம் புரிவது.*

◆ **எல்லார் உடைமையும் ஊர்க்குப் பொது என்றும், எல்லார் உழைப்பும் ஊர்க்குப் பொது என்றும் ஆகிவிட்ட நிலையில் ஆர்வத்தோடும் அக் கறையோடும் உழையாமல் பலர் இருக்கவும் கூடுமல்லவா பாட்டி?**

*நீ அரசின் கூட்டுறவு அமைப்புகளையும் தொழிலகங்களையும் வணிக நிறுவனங்களையும் கொண்டு சொல்கிறாய். அப்படிப்பட்ட நிலை ஒப்புரவு அமைப்புகளில் உருவாகாது.*

அரசு சட்டம் காவல் படை சிறைச்சாலை முறைமன்றம் ஆகியவைதாமா நாட்டை ஆட்சி புரிகின்றன? விரல் விட்டு எண்ணக்கூடிய சிலர்க்கே இவை பயன்படுவது போல் தோற்றம் தருகின்றன. மெய்யான நற்பயன் செய்வது மனச்சான்றே ஆகும். மனச் சான்றுடன் ஏற்றுக் கொண்ட நடைமுறை ஒழுக்க வாழ்வு நம் ஒப்புரவு வாழ்வு.

அவரவர் மனச்சான்றே அவரவர்க்கு முறைமன்றம்; காவல் துறை; அரசு ஆணை, அறியாமல் தவறினால் எனக்கென்ன உனக்கென்ன என எவரும் ஒதுங்கார். உடனே அறிவுறுத்தித் திருத்துவர். ஊரவைக்குக் கொண்டு சென்றும் முன்வைப்பார். "ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்" என்பது ஒப்புரவு ஊர்களில் தலைகாட்டாது. அவர்களைத் திருத்தி நன்னெறிப்படுத்தவே ஊரவை கடமை புரியும்.

◆ **ஊர் நலங்களையும் பொலங்களையும் ஊரவை பார்த்துக் கொள்கிறது என்றால் நாட்டில் இருந்து அது தனிப்பட்டது இல்லையே! நாட்டுச் சட்டங்களும் அதிகாரங்களும் இவ்வூர்க்கும் உண்டுதானே!**

உண்டுதான்! ஊர்ப் பெயர்க்கு எல்லா நிலங்களையும் உடைமைகளையும் பதிவு செய்தோம் என்று சொன்னேனே. நாட்டை விட்ட தனி ஊர் என்றால், பதிவு வேண்டிய தில்லையே! அரசுச் சட்டமும் அதிகாரமும் இங்கே வரவேண்டிய தேவை அளவுக்குத் தானே வரும்? வரத் தேவை இல்லை என்றால்? களவு திருட்டு கலப்படம் கடத்தல் அடிதடி கொலை தீவைப்பு இப்படி

இருந்தால்தானே அரசுக்கு இங்கே வேலை. மதுவே குடியா ஊரில் மதுவிற்க, மதுக்காய்ச்ச இடமிருக்குமா? புகை, புகையிலை,இல்லா ஊரில் கஞ்சா, அபின் இடம் பெறுமா? பரிசுச்சீட்டு வாங்குதல், சீட்டாடுதல் வட்டிக்கடை நடத்துதல், ஏலச்சீட்டு நடத்துதல், இப்படிப்பட்டவையை ஏறிட்டும் பாராத ஊரில் அரசுச் சட்டத்துக்கு என்ன வேலை? இத்தகைய ஊர்களை, நல்லரசு என்றால் ஊக்கப்படுத்தத்தானே வேண்டும்! அதையுமே எதிர்பாராத எங்களுக்கு, அரசு பற்றி அச்சமே இல்லை... ஏதாவது, தெரிய வேண்டுமென்றால் ஊரவையைக் கேட்பர். அதனை அது பார்த்துக் கொள்ளும்.

◆ **பாட்டி, இந்த வீடு யார் வீடு?**

இந்த வீடு மட்டும் இல்லை எல்லா வீடும் ஊர் வீடே, ஏன் உனக்கு ஐயம் வந்தது?

◆ **ஊர் வீடு என்றால், யார்க்கும் இதனை மாற்றித் தரலாமே!**

பெரிய தொழிலகங்கள், குடியிருப்புகளை உண்டாக்குவதையும் பார்த்திருப்பாய். அங்குப் பணி புரிபவர்க்கு இன்னவீடு என்றும் ஒதுக்கியிருப்பர். பணிக்காலம் எல்லாம் அவ்வீட்டில் இருக்கலாம். எனினும் தொழிலக வீடுதான். சொந்தவீடு ஆகாது. அதே வீட்டில் அத்தொழிலகத்தில் வேலைசெய்பவர் அவர் தொடரலாம். இல்லையானால் அவர் வேறு இடத்திற்குச் செல்ல வேண்டியது தான். ஆனால் இங்கே குடியிருப்பவர் எவரும் அப்படி வேற்றூர்க்கு உரியவராய் வேலை பார்ப்பவர் அல்லர். இங்கேயே குடியிருந்தவர்.

இங்கேயே வேலையும் பார்ப்பவர். ஊர் வீடே என்றாலும் அவர்க்கு உரிமை வீடாகவே இருக்கும். அவ்வீட்டை விட்டுக் காலி செய்யும் நிலை ஏற்பட்டால் அன்றி அவ்வீடு அவர் வாழ்விடமேயாம். அவரும் அவர் மனைவி மக்கள் ஆகியோரும் அங்கே தங்கியிருக்க உரிமை உடையவரே.

◆ ***சரி பாட்டி; பிள்ளைகளைப் பற்றி அக்கறையில் ஊர்க்கு மட்டுமே பங்களிப்பா? பெற்றோர்க்கும் உண்டா?***

ஊர்க்கும் பொறுப்பு உண்டு. பெற்றோர்க்கும் பொறுப்பு உண்டு...! ஊர்ப் பொதுவில் வாழ்ந்து, கல்விகற்று, மருத்துவம் பார்த்து ஆடிக்கூடியிருந்தாலும், அப்பா அம்மா என்பது போய்விடுமா? அதனை அழியவிடக்கூடாது என்பதற்காகத் தானே ஒவ்வொரு குடும்பத்துக்கும் வீடு தனித்தனியே ஒதுக்கி அதிலேயே பெற்றோரும் பிள்ளைகளும் தங்கியிருக்கச் செய்வது. "தம் பொருள் என்ப தம் மக்கள்", "தம் மக்கள் மழலைச் சொல்" "தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ்" என்பவையெல்லாம் சொல்லிய திருவள்ளுவர், "தம்மில் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது" என்றாரே, தம்மினும் சிறந்தோராகச் செய்வதும் சான்றோர் பாராட்டும் சான்றோராக இருக்கச் செய்வதும் ஆகிய அவற்றால் எவரினும் மிகுதியாக மகிழ்பவர் பெற்றோர் என்பது புலப்படுமே. ஆதலால் குழந்தைகள் வளர்ச்சி, நலம், அறிவு, பண்பாடு ஆகியவற்றில் பெற்றோர் பங்கு பெரிதேயாம். பெற்றோருடன் ஊரும் அக்கறை கொள்ளும் போது இரட்டைப் பங்கு நலமாவதும் உறுதியாம். நீயும், நன்றாகத் தான் துருவித் துருவிக் கேட்கிறாய்!

◆ **பாட்டி, இயற்கையிலேயே சில பற்றுதல்களும் ஆர்வங்களும் திறங்களும் பலப்பலர்க்கும் உண்டு. வார்த்தெடுத்த ஆணி போலவோ, செய்து வைத்த பொம்மை போலவோ செய்பொருள் அல்லர் மக்கள். அவரவர் தனித்தனி விருப்பு செயல் திறம் ஆகியவற்றால் நிறைவும் இன்பமும் காண ஏதாவது வழி இங்கே செய்யப்பட்டுள்ளதா?**

அவர்கள் வீட்டிலே இருந்து கொண்டு என்னென்ன செய்வார்களோ அதேபோலச் செய்யலாம். அவர்கள் வீடு ஒரு சிறு குடும்பம். இது பெருங்குடும்பம்; கூட்டுக்குடும்பம். இந்நாளில் கூட சோற்றுப் பிரிவினையும் சொத்துப் பிரிவினையும் இல்லாமல் வாழும் கூட்டுக் குடும்பங்கள் நம் நாட்டில் உண்டு என்பதை நீ அறியின் இதில் புதுமை எதுவும் இல்லை என்பது புலப்படும். நூறு நூற்றைம்பது பேர் வாழும் கூட்டுக்குடும்பத்தை நான் அறிவேன்.

ஒருவர்க்கு ஓவிய விருப்பம்; அவர் அக்கலையில் ஆர்வம் காட்டலாம். அதற்கு வேண்டியதை ஊரே முன்னின்று செய்யும். ஒருத்திக்கு இசை விருப்பம்; அதனைக் கற்கவும் கற்பிக்கவும் ஊரே வழிவகை செய்யும். வெளியூர்க்குப் பயன்படுத்தி ஊர்நலம் காக்கவும், ஊரே முன்னின்று உதவும். நாம் பிரிந்து கொள்ளாமல் புரிந்து கொண்டு வாழும் ஊர்க்குடும்பம் இது. அவ்வளவுதான்.

தம்பி, உன் கையில் இருக்கும் கம்பைச் சுழற்றிச் சிலம்பம் ஆடலாம். அது கலை; அக்கம்பைச் சுழற்றும்போது அடுத்தவர் மேல் படக்கூடாது இல்லையா? அதுபோல் பிறர் உரிமை கெடாமல் தம் உரிமையை எவரும் மேற்கொள்ளலாம்.

◆ **பாட்டி, ஒருவர்க்கு உறவினர் அடுத்த ஊரிலே உள்ளார். அவர்க்கு உதவவேண்டும் என்று இவ்வூரில் வாழும் ஒருவர் நினைக்கிறார். ஊர் உதவியை நாடுதல் முறையில்லை. அவர் இவ்வூர்க்கு வந்து இணைந்து விடவும் விரும்பவில்லை. இப்படி இக்கட்டான நிலையில் அவர் என்ன செய்வது?**

நல்லதம்பி, நீ விதிவிலக்குகளைக் கேட்கிறாய். விதிக்கு ஒப்புக்கொண்டு நடையிடத் தெரிந்துவிட்டால், விதிவிலக்குகளைச் சீர்செய்வது கடினமே இல்லை. ஊரில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் உணவு உடை உறைவிடம் கல்வி மருத்துவம் முதலிய எல்லாச் செலவுகளும் போக, மாதம் பிறந்த நாளில் ஒரு தொகை தரப்படுகிறது. ஆண், பெண், பிள்ளை, முதியர் என்று பாராமல் எல்லோருக்கும் தரப்படுகிறது. அதனோடு ஆண்டுக்கு ஒரு முறை சிறப்புத் தொகை ஒன்றும் தரப்படுகிறது. உழைப்புத் திறம், உண்டாக்கும் ஆற்றல் ஆகிய இவற்றை மதிப்பிட்டுத் தக்கவர்க்குத் தக்க அளவில் விருப்பூதியமும் தரப்படுகிறது. இத்தொகையை அவர்கள் விருப்பம் போல் செலவிட்டுக் கொள்ளவும் சேர்த்து வைக்கவும் உரிமை உண்டு. விரும்புபவர்கள் உறவினர்கள் ஊர்க்குப் போய் வரவோ, சுற்றலாச் சென்றுவரவோ ஆண்டுக்கு 30 நாள்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். சுற்றலாச் செல்பவர்க்கு ஊர் ஒத்துக்கொள்ளும் அளவில், உணவுப்படியும் தரப்படும். ஏனென்றால், அவர்கள் உணவுச் செலவு, உலாச் சென்ற போது ஊர்க்குக் குறைகிறது அல்லவா!

◆ **எழுதி வைத்துச் சொன்னால் கூட இப்படிச் சொல்ல முடியாது பாட்டி, உங்களைப்போல்**

ஊருக்கு ஒருவர் கிடைத்துவிட்டால் அந்த ஊர்க்கு ஒப்பான ஊர் அந்த ஊராகவே இருக்கும்.

*சரி, நல்லதம்பி, ஊர்ச் செய்திகளை எல்லாம் அறிந்து கொண்டாய். நீ இனி என்ன செய்யப்போகிறாய்?*

◆ பாட்டி என்னைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். முன்னரே சொல்லியிருக்க வேண்டிய ஒன்றைச் சொல்லாமல், இப்பொழுது சொல்லப் போகிறேன். பாட்டி, நான் மெய்யாகவே உங்கள் பேரன்தான் பாட்டி. உங்கள் கூடப்பிறந்த முத்தம்மாள் மகன் பிள்ளை நான். முத்தம்மாள் வீட்டுக்காரர் தலைவன் பட்டிக்காரர் என்பதும், அவர் துளசி என்னும் மகனைப் பெற்றுவிட்டு இளமையிலேயே இறந்து போனதும் உங்கள் நினைவில் இருக்கும். அந்தத் துளசி ஆளாகி அம்மாவை அழைத்துக்கொண்டு மேலைச் சீமையில் பஞ்சம் பிழைக்கப் போனது உங்களுக்குத் தெரியாது. அங்கே தறிவேலை செய்து கைக்காசு தேடி, ஒரு திருமணமும் செய்து கொண்டு அம்மாவுடன் பேர் பெருமையுடன் வாழ்ந்தார். அங்கேயே தறிவேலை செய்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். அவர்க்கு நான் ஒரே ஒரு மகன். அப்பா உண்டாக்கிய தறிச்சாலை இருக்கிறது. வேலையும் நன்றாக நடக்கிறது. ஒரு கணக்கரைப் போட்டுக்கொண்டு நானே மேற்பார்த்து வருகிறேன். தற்செயலாகத் தறிச்சாலைக்கு வந்த ஒருவரிடம் என் முன்னோர் வாழ்ந்த ஊர் வாழவந்தாள்புரம் என்றேன். அவர்தாம் அது பழைய ஊராய் இல்லை! புதுமையான ஊர்! ஊரே ஒரு

**குடும்பாக விளங்கும் ஊர் என்று பெருமையாகச் சொன்னார். உங்கள் பெயரைச் சொல்லிச் சொல்லிப் புகழ்ந்தார். அந்த மண்ணை வணங்கி, உங்களையும் உறவினரையும் பார்த்துவிட்டுப் போகவே வந்தேன்.**

நல்ல தம்பி நீ முத்தம்மாள் பேரன் என்றால் என் பேரன் தான். உம் அம்மா பெயரென்ன?

◆ **என் அம்மா பெயர் மணியரசி. பாட்டி அப்பா அம்மா மூவரும் நலமாக இருக்கிறார்கள்.**

நன்றாக இருங்கள். நம் ஊரைப் பார்க்க வேண்டும் என்றே வந்திருக்கிறாயே! நீ நல்ல தம்பிதான்.

◆ **பாட்டி, நீங்கள் இவ்வூர்த் தொண்டுக்கு என்னைப் பயன்படுத்திக் கொள்வீர்களா?**

அப்பா! எப்படியோ நினைத்து நீ கேட்டவற்றுக் கெல்லாம் சொல்லி வந்தேன். அப்பேச்செல்லாம் வீண் பேச்சு என ஆக்கி விட்டாயே!

◆ **என்ன பாட்டி?**

ஏதாவது ஒரு சிற்றூரை எடுத்துக்கொண்டு ஏதவாது தொண்டு செய்வாய் என நம்பியே நான் பேசினேன். நீ என்ன வென்றால் இங்கேயே தங்கி விடுகிறேன் என்கிறாய். அடுத்தவர்கள் காலில் நிற்பதை விட்டுவிட்டு உன் காலில் நிற்கப் பார்.

◆ **பாட்டி, நான் மட்டும் இங்கே தங்கப் போவதில்லை. அப்பா அம்மா பாட்டி ஆகியவர் களை அழைத்துக் கொண்டு அங்கு நாங்கள்**

**பார்க்கும் தறிச்சாலையையே இங்கே மாற்றி விடுகிறேன். அங்கு வேலை பார்ப் பவர்களையும் இங்கே அழைத்துக் கொள்ளலாம்.**

நல்லதம்பி, நீ சொல்வதைக் கேட்க நன்றாகத்தான் இருக்கிறது. இந்த ஊர்த் தேவைக்கு அத்தனை தறிகள் தேவை இல்லை. அத்தனை பேர்க்கும் குடியிருப்புகள் செய்ய இடமும் இல்லை. விளை நிலத்தை யெல்லாம் வீட்டு நிலமாக்கி விட்டால், எங்கள் நிலைமை என்ன ஆகும்? எங்கள் மேல் உனக்கு நல்லெண்ணமும் எங்கள் செயற்பாட்டில் நம்பிக்கையும் இருந்தால் ஒன்று செய்.

◆ **என்ன செய்ய வேண்டும் பாட்டி, அப்படியே செய்வேன்.**

இங்குள்ள இரண்டு குடும்பத்தினர்க்குத் தறிபோடும் பயிற்சியை நீ தா. இயல்பாகவே சிலர் நூல் நூற்றுப் பழகியிருக்கிறார்கள். அவர்கள் அப்பயிற்சியையும் பெற்றுக் கொண்டால், நாங்களே எங்கள் ஊர்த்தேவையை நிறைவேற்றிக் கொள்ளமுடியும். உன் தறிச்சாலையே இங்கே வந்து விட்டால் அச்சாலைக்கும் குடியிருப்புக்கும் போக, விளைவுக்கு இடம் இராது. விளைவிக்கும் வேலையும் இராது. எங்கே வேலை கிடைக்கும் என்றும், எங்கே துணிவிற்கச் சந்தை கிடைக்கும் என்றும் ஊரே பழைய நிலைக்குப் போய்விடும்.

◆ **சரி பாட்டி, நீங்கள் சொல்கிறபடியே செய்கிறேன். தறி நெய்யவும் பாவு போடவும் பயிற்சி தந்து அனுப்புகிறேன். உங்களுக்கு வேண்டும் அளவில் தறிகளும் போட்டுத் தருகிறேன்.**

அப்படியே செய்; பயிற்சிக்கும் தறிபோடுவதற்கும் ஆகும் செலவு இவ்வளவு என்று கணக்குப் பார்த்து

ஊரவை வழியே பணத்தைப் பெற்றுக்கொள். நன்கொடை என்று சொல்லி எங்களையும் எங்கள் திட்டங்களையும் உழைப்பையும் குறைத்துவிடச் செய்யாதே!

உழையாதவர்க்கு உணவு தருவதும், நன்கொடை தருவதும் அந்த உழையாமையை ஊக்கப்படுத்தி உருப்படாமலே செய்துவிடும். அதனால், பிறர்க்கு உண்டாகிய பசியை ஆற்றுவது நல்லதுதான்; அதைப் பார்க்கிலும் நல்லது அவர்கள் பசியை அவர்களே ஆற்றிக் கொள்ளும் வகையில், பொருள் தேடும் வழியைத் தந்து மாற்றியமைப்பதாகும் என்கிறார் வள்ளுவர் அல்லவா!

"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை

மாற்றுவார் ஆற்றலின் பின்"

என்பது அது.

◆ **சரி பாட்டி; அப்படியே செய்கிறேன். அப்பா முதலியவர்களைக் கலந்துகொண்டு எங்கள் தொழிலகத்தை ஒப்புரவுத் தொழிலகமாகச் செய்ய முயல்கிறேன். ஒப்புரவு ஊரைப் பாட்டி கண்டால் ஒப்புரவுத் தொழிலகத்தைப் பேரன் செய்யலாம் அல்லவா! உங்கள் வாழ்த்தும் வழி காட்டலும் எப்பொழுதும் தேவை பாட்டி.**

நல்லது; திட்டமிட்டு உன் விருப்பம்போல் செய். அப்படிச் செய்ய நீங்கள் முடிவெடுத்துவிட்டால், நானும் அவருமே வந்து வழிகாட்டுகிறோம்.

◆ **'அவர்' என்கிற தாத்தா பெயர் கூடத் தெரியாது பாட்டி.**

நீ என்ன? ஊரில் பலர்க்குமே 'அவர்' பெயர் தெரியாது. படிக்கிற தாத்தா என்பதுதான் ஊரறிந்த பெயர். ஏனென்றால் எப்பொழுதும் படித்துக் கொண்டே இருப்பார். அவரிடம் ஒருநாள் கேட்டேன்; "உங்கள் படிப்புக்கு ஒய்வே கொடுக்க மாட்டீர்களா?" என்றேன். 'மாட்டேன்' என்றார். ஏன் என்றேன். திருவள்ளுவர் ஆணை என்றார்! அப்படி என்ன ஆணை தந்தார் என்றேன்.

**"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**
**சாந்துணையும் கல்லாத வாறு"**

என்றார். படித்தவர்க்கு எல்லா நாடும் அவர் நாடு; எல்லா ஊரும் அவர் ஊர்; அவ்வாறாகவும் இறக்கும் வரையும் படியாமல் இருப்பது எதற்காக என்பது திருவள்ளுவர் ஆணை. இல்லையா என்றார்.

◆ **நல்ல பாட்டி; நல்ல தாத்தா!**

ஆம்! நல்ல தம்பி!

****

ஊர்க்கும் பொறுப்பு உண்டு. பெற்றோர்க்கும் பொறுப்பு உண்டு...! ஊர்ப் பொதுவில் வாழ்ந்து, கல்விகற்று, மருத்துவம் பார்த்து ஆடிக்கூடியிருந்தாலும், அப்பா அம்மா என்பது போய்விடுமா? அதனை அழியவிடக்கூடாது என்பதற்காகத் தானே ஒவ்வொரு குடும்பத்துக்கும் வீடு தனித்தனியே ஒதுக்கி அதிலேயே பெற்றோரும் பிள்ளைகளும் தங்கியிருக்கச் செய்வது. "தம் பொருள் என்ப தம் மக்கள்", "தம் மக்கள் மழலைச் சொல்" "தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ்" என்பவையெல்லாம் சொல்லிய திருவள்ளுவர், "தம்மில் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது" என்றாரே, தம்மினும் சிறந்தோராகச் செய்வதும் சான்றோர் பாராட்டும் சான்றோராக இருக்கச் செய்வதும் ஆகிய அவற்றால் எவரினும் மிகுதியாக மகிழ்பவர் பெற்றோர் என்பது புலப்படுமே. ஆதலால் குழந்தைகள் வளர்ச்சி, நலம், அறிவு, பண்பாடு ஆகியவற்றில் பெற்றோர் பங்கு பெரிதேயாம். பெற்றோருடன் ஊரும் அக்கறை கொள்ளும் போது இரட்டைப் பங்கு நலமாவதும் உறுதியாம்.

- இரா. இளங்குமரனார்